காடு வளர்போம் ! காகிதம் செய்வோம் !! கற்றலை ஊக்குவிப்போம் !!!

TNPL

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

காகிதபுரம், கரூர் மாவட்டம்

# வனத்தோட்ட மலர்

பதிப்பு - ஜனவரி 2020 | மலர் - 3

**Book Post**

பெறுநர்

**அனுப்புநர்:**

டி.என்.பி.எல் வனத்தோட்டத்துறை,
தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்,
காகிதபுரம், கரூர் (DT) - 639 136.
மின்னஞ்சல் - plantation@tnpl.co.in
அலைபேசி எண் - 04324 27001 to 1 (10 lines)



## முகவுரை

### மதிப்பிற்குரிய விவசாய பெருமக்களே

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூன்றாவது பதிப்பிற்க்கு தங்களின் ஆர்வமும் வரவேற்பும் தான் முழு முதற்க்காரணமாக அமைந்துள்ளது.

இப்பதிப்பிற்க்கான மூலக் காரணமே டி.என்.பி.எல் வனத்தோட்டத் திட்டத்தில் பதிவு செய்திருக்கும் விவசாயிகளுடன் ஓர் நல்லிணக்கம் மேம்படுத்துவதற்க்கும், மேலும் விவசாயிகள் தங்களின் சந்தேகங்களையும் கருத்துக்களையும் உடனுக்குடன் தெரிவிப்பதற்க்கு ஏதுவாக இருக்கவும் அமைக்கப்பட்டுள்ளது.

### கடந்த நூல்களின் சிறு தொகுப்பு

முதல் பதிப்பானது ஏப்ரல் மாதமும், இரண்டாம் பதிப்பானது அக்டோபர் மாதமும் வெளியிடப்பட்டது.

முதல் பதிப்பின் சிறப்பம்சமாக நிறுவனத்தின் முன்னோட்டம், திட்டங்களின் விரிவுரை மற்றும் சாகுபடிக்குறிப்புகள் இடம் பெற்றது. இரண்டாம் பதிப்பில் நீர் மேலாண்மை மற்றும் வேளாண்காடுகள் பற்றிய குறிப்புகள் வழங்கப்பட்டது.

**இந்த நூலில் நீங்கள் காண இருப்பது முத்தான மூன்று விவசாயிகளின் வெற்றி அனுபவங்கள்.**

- நீர் நில மேலாண்மையின் மூலம் கூழ்மர சாகுபடி
- மாசு அடைந்த நீரிலும் காசு பார்க்கலாம்
- கூழ்மரம் பயிரிட்டு தன் உயிர் காத்த அனுபவம்

### நீர் நில மேலாண்மையில் கூழ்மரப்பயிர்களின் பங்கு

வாய்க்கால் பாசன வசதி பெறும் நிலங்களில் விவசாயப் பயிர்கள் சாகுபடி செய்து அதிக வருமானம் பெறலாம். தண்ணீர் பற்றாக்குறை அல்லது தண்ணீர் இல்லாத வருடங்களில் விவசாயப் பயிர்கள் சாகுபடி செய்வது கடினமாகும். இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை பாசன வசதி பெறும் கீழ்பவானி வாய்க்கால் ஆயக்கட்டுப் பகுதிகளில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே விவசாயம் செய்யப்படுகிறது.

இப்பகுதிகளில் ஒரு வருட காலத்திற்க்கு எந்த ஒரு பயிரும் சாகுபடி செய்யாமல் தரிசாக உள்ளது. அத்தகைய நிலங்களில் தொடர்ந்து சாகுபடி செய்ய கூடிய வகையில் கூழ்மரங்களை நடவு செய்து பயன் பெறலாம். அத்தகைய நிலத்தில் பயிரிட்ட ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் வட்டம், களிங்கயம் (மொடச்சூர்) கிராமத்தில் உள்ள திரு.பழனிசாமியின் மகன் சக்திவேல் (அலைபேசி எண் – 7373008844) தன்னுடைய அனுபவத்தை கீழ்கண்டவாறு பகிர்ந்துள்ளார்.

நான் எனது 12 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கர் தைல மரம் IFGTB EC4 என்ற ரகத்தினை பயிரிட்டு சொட்டு நீர் பாசனம் மூலம் பராமரித்து வருகிறேன். மூன்று வகையான இடைவெளிகளில் (8அடி X 6அடி, 9அடி X 4அடி மற்றும் 6அடி X 6அடி) மரம் நடவு செய்துள்ளளேன். இவற்றில் 6அடி X 6அடிக்கு நடவு செய்த மரங்கள் நன்கு வளர்ந்துள்ளது.



ஒவ்வொரு மரமும் சராசரியாக 25 செ.மீட்டர் சுற்றளவும், 12 மீட்டர் உயரம் உள்ளது. மேலும், கூழ்மரம் பயிரிட்டதன் மூலம் வறட்சி காலங்களிலும் நீர் மேலாண்மை சிறப்பாக செயல்படுத்த முடிகிறது. மரப்பயிருக்கு சொட்டுநீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதால் குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்துவது மட்டுமல்லாமல் நீர் பாய்ச்சுவதற்க்கான செலவு நாளொன்றுக்கு சுமார் ரூ.400/– வரை சேமிக்க முடிகிறது.

தமிழ்நாடு காகித ஆலையானது குறைந்த பட்ச ஆதார விலை உறுதியளிப்பதினால் கூழ்மரம் பயிரிடுவதன் மூலம் நிலங்களிலிருந்து நிரந்தர வருமானம் கிடைக்க வழி வகை செய்கிறது. இதனால் விவசாயிகள் தாராளமாக கூழ்மரங்களை பயிரிடலாம் என தெரிவித்துள்ளார். மேலும், இடுபொருட்கள் மற்றும் வேலையாட்களின் தேவை முற்றிலும் குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது போன்ற சொட்டு நீர் பாசன முறையில் சாகுபடி செய்யும் பகுதிகளில் அடர் நடவு முறையில் (6அடி X 6அடி) பயிரிடுவதன் மூலம் அதிக மகசூல் பெறுவதற்க்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மாசடைந்த நீரிலும் காசு பார்க்கலாம்
## கூழ்மரப்பயிரின் மூலம் !

தமிழ்நாட்டில் உள்ள நொய்யல் ஆறு சாயப்பட்டறைகளின் காரணமாக மாசு அடைந்திருப்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். நொய்யல் ஆற்றிலிருந்து திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் பாசன வசதி பெறுவதற்க்கான கால்வாய்கள் மற்றும் கட்டமைப்புகள் நல்ல நிலையில் உள்ளன. ஆனால், மாசடைந்த நீர் விவசாயப் பயன்பாட்டிற்க்கு உகந்ததாக இல்லாமல் இருந்து வருகிறது.

கூழ்மரப் பயிர்களான சவுக்கு மற்றும் தைலம் ஆகியவை உப்பை தாங்கி வளரும் தன்மையை பெற்றுள்ளன. இதை அறிந்த நொய்யல் ஆயகட்டுப் பகுதியிலுள்ள விவசாயி திரு.பழனிச்சாமியின் மகன் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் (அலைபேசி எண் – 9942868480) கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், அத்திகாபாளையம் கிராமத்தில் உள்ள தனது 3 ஏக்கர் நிலத்தில் 2016 ஆம் ஆண்டு TNPL பண்ணைகாடுகள் மூலம் விதை சவுக்கு நடவு செய்தார். பாசன நீரின் உப்பின் அளவு மிக அதிக அளவில் இருப்பதால் (8/5 ds/m; tds -> 6000 PPM) விவசாய பயிர்கள் எதுவும் செய்ய முடியவில்லை. தென்னை மரங்களிலும் எதிர்பார்த்த வருவாய் கிடைக்கவில்லை. டி.என்.பி.எல் வனத்தோட்டத் துறை மூலம் மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை செய்து, விதை சவுக்கு நடவு செய்யப்பட்டது.



3 ஏக்கர் பரப்பில் நடவு செய்த சவுக்கு, 2019 ஆம் ஆண்டு அறுவடை செய்யப்பட்டது. ஏக்கர் ஒன்றுக்கு 42.22 MT வீதம் மொத்தம் 126.66 MT அறுவடை செய்யப்பட்டது. டன் ஒன்றுக்கு ரூ.5575/– வீதம் மொத்தம் ரூ.7,06,130/– வருவாய் கிடைத்துள்ளது.

தற்போது முதல் பயிரான சவுக்கு அறுவடைக்குப் பின் மீண்டும் கூழ்மரம் நடவு செய்வதற்காக நிலத்தை தயார் செய்து சொட்டு நீர் பாசனமும் அமைத்துள்ளார்.




இது குறித்து திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் நம்மிடையே சில தகவல்கள் பகிர்ந்து கொண்டார்.

1. மாசடைந்த நீர் மற்றும் நிலம் ஆகியவையும் முறையாக விவசாயம் செய்தால் நல்ல வருவாய் பெற வாய்ப்புள்ளது.

2. மாசைத் தாங்கி வளரும் பயிர் அல்லது மரங்களை தேர்வு செய்து நடவு செய்ய வேண்டும். மேலும் வேளாண் மற்றும் வனத்துறை வல்லுனர்களின் ஆலோசனைகளைப் பெற்று மண் மற்றும் நீர் பரிசோதனை செய்து அதன்படி சாகுபடி செய்தால் நல்ல பலன் அடையலாம்.

3. சாதாரண நிலங்களில் விவசாயம் செய்வது போலவே மாசுபட்ட நிலங்களிலும் நம்பிக்கையுடன் விவசாயம் செய்ய வேண்டும். மற்ற நிலங்களில் கிடைக்கும் இலாபத்தை போலவே, மாசடைந்த நிலங்களிலும் வருமானம் பெறலாம்.

## உயிர் காத்த கூழ்மரம்



வணக்கம் என் பெயர் ரவிச்சந்திரன். நான் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை வட்டம் வடுகப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவன்.

செல்: 96556 50078

நான் நமது TNPL நிறுவனத்தில் உள்ள பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு தைல மரங்கள் நடவு செய்திருந்தேன். TNPL கள அதிகாரிகளின் ஆலோசனைப்படி உயர்ரக தைல மரங்களை நடவு செய்து உரிய முறையில் பராமரித்து வந்தேன். கடந்த இரண்டு வருடம் முன்னால் இருதய பிரச்சனையால் பாதிக்கப்பட்டேன். இருதய சிகிச்சைக்கு எனக்கு அதிக பணம் தேவைப்பட்டது.

அப்போது செய்வதறியாது எனது மனைவி திகைத்த போது நான் பயிர் செய்திருந்த தைல மரங்கள் தான் உதவியது. உடனே அதனை வெட்டி பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என நினைத்து, TNPL நிறுவனத்தை தொடர்பு கொண்டு தைல மரங்களை வெட்டி பணம் தருமாறு கேட்டுக் கொண்டோம். நிறுவனமும் உடனே மரங்களை வெட்டி எனக்கு தொகையை முழுவதுமாக கொடுத்தது. அதன் மூலம் எனது மருத்துவ செலவுகளை கவனித்து என் உயிரை காப்பற்றி கொண்டேன் என்று சொல்வதை விட TNPL நிறுவனம் எனது உயிரை காப்பாற்றியது என்றே சொல்ல வேண்டும்.

நிலத்தில் வேறு எந்தப் பயிர் நடவு செய்திருந்தாலும், இவ்வளவு பெரிய தொகை தக்க தருணத்தில் எனக்கு முழுமையாக கிடைத்திருக்காது என்பதை என்னால் உறுதியாக சொல்லமுடியும்.

தைல மரங்கள் இயற்கைக்கு எதிரானது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் தைல மரங்களை நடவு செய்யாமல் இருந்திருந்தால் என் உயிரை காப்பாற்றியிருக்க முடியாது. மேலும் சாகுபடி செய்ய முடியாமல் உள்ள தரிசு நிலத்தில் தைல மரங்களை நடுவதன் மூலம் நமக்கு வருமானம் கிடைப்பதுடன் நிலத்தின் வளமும் பாதுகாக்கப்படுகிறது. தைல மரங்களை நடவு செய்து வளர்த்ததன் மூலம் எனக்கு தேவையான நேரத்தில் பணம் கிடைத்தது. இந்த வருடமும் மீண்டும், 5 ஏக்கர் நிலத்தில் தைல மரம் பயிரிட்டுள்ளேன். என்னைப் போன்று மற்ற விவசாயிகளும் TNPL பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் தைல மரங்களை நடவு செய்து பயன் அடையுங்கள்.

## TNPL வனத்தோட்டத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்

உத்தராஞ்சல் மாநிலம், டேராடூனில் அமைந்துள்ள மத்திய வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாறுபாடு அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக் குழுமத்தின் தலைமை இயக்குநர் முனைவர். சுரேஸ் கெய்ரலா, **IFS**, அவர்கள் TNPL வனத்தோட்டத் துறை கூழ்மர குளோனல் நாற்று உற்பத்தியில் தென்னிந்தியாவில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை அறிந்து நம்முடைய குளோனல் நாற்றுப் பண்ணையை பார்வையிடுவதற்காக 21.11.2019 அன்று TNPL நிறுவனத்திற்கு வருகை தந்தார்.



தமிழ்நாடு அரசு வனத் துறையின் கீழ் கோயம்புத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு வனப் பயிற்சி கல்லூரியில் புதிதாக வனப் பணியில் சேரும் வனவர், வனச்சரகர், வனக் காப்பாளர் மற்றும் வனத்துறை அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அளித்து வனத்துறை பணிக்கு அனுப்பி வருகிறார்கள். இப்பயிற்சியின் ஓர் அங்கமாக களப் பயிற்சிக்காக TNPL வனத்தோட்டத் துறையின் வீரிய ரக குளோனல் நாற்று உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு வன அலுவலர்கள் பயிற்சி பெற்று செல்கின்றனர். அதன் அடிப்படையில் கடந்த 12.12.2019 அன்று 32ஆவது பிரிவைச் சேர்ந்த 55 வனச் சரகர்கள் ஒரு நாள் களப் பயிற்சியில் கலந்து கொண்டனர்.



மத்திய வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம் இந்தியாவில் மரப்பயிர் சாகுபடி செய்யக்கூடிய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசு சாரா தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் மரப்பயிர் சாகுபடியில் பின்பற்றக் கூடிய புதிய உத்திகளை கண்டறிந்து ஆய்வு அறிக்கை அளிக்குமாறு தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் மத்திய வனம், சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்தின் கீழ் அமைந்துள்ள இந்திய வனப்பரப்பு அளவீட்டுத் துறையின் தெற்கு மண்டல இயக்குநர் திரு.சுப்ரமணியம், IFS., அவர்கள் மற்றும் இணை இயக்குநர் திரு. வேணுபிரசாத், IFS., அவர்கள் TNPL நிறுவன வனத்தோட்டத் துறையின் வனத்தோட்ட செயல் முறைகளை கண்டறிந்து பாராட்டி சென்றனர்.



## மேலும் விவரங்களுக்கு

| மண்டலம் | கைபேசி எண் |
|---|---|
| வடக்கு | 9442591437 , 04146-224035 |
| மேற்கு | 9442591430, 9442591438 |
| கிழக்கு | 9442591417, 04331-252360 |
| தெற்கு | 9442591433, 04322-261225 |

வனத்தோட்டத்துறை
தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்
காகிதபுரம், கரூர் மாவட்டம் – 639 136
மின்னஞ்சல் – plantation@tnpl.co.in
வாட்ஸ்அப் எண் – 9442591419